Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தென் தமிழகப் பகுதியில் காணலாகும் சமணர் குடவரை கோவில்களும் கல்வெட்டு செய்திகளும்

நா.வித்யா, தமிழ் உதவி பேராசிரியர்,
வ. உ. சி பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி,
தூத்துக்குடி வளாகம், தூத்துக்குடி..
vidyasaravanan1988@gmail.com



**ஆய்வு நோக்கம்**

தமிழ்நாட்டில் தென்பகுதியில் காணப்படும் குடைவரைக் கோயில்கள் மலைப்பகுதிகளில் அமைந்துள்ள குடைவரை கோயில்கள் சமணர்களின் வாழ்விடமாகவும் வழிபாட்டு தலங்களாகவும் இருந்துள்ளன குடைவரை கோயில்களின் அமைப்பும் புடைப்புச் சிற்பங்களும் கற்கோயில் கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது சங்கம் மருவிய காலத்திலும் கட்டப்பட்ட சிறப்புமிகு வீடுகளும் ஆலயங்களும் காலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் சிதைந்து போயின இதனை அறிந்து கொண்ட பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் செங்கல் சுண்ணாம்பு மூங்கில் என்று எவற்றையும் பயன்படுத்தாமல் மலை பாறைகளை குடைந்து குடைவரை கோயில்களை கட்டினான் இவ்வாறாக கட்டப்பட்ட குடைவரை கோயில்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காலத்தால் அழியாமல் நிலைத்து நிற்கின்றன ஆகினும் அவற்றின் கலை நுணுக்கங்கள் சமூகத்தினரால் உணரப்படாமல் இருக்கின்றன வரலாற்று சிறப்புமிக்க குடைவரை கோயில்களில் அமைந்துள்ள புடைப்பு சிற்ப ◌ங்கள் சிதைவு வராமல் பாதுகாக்க வேண்டியது மக்களின் கடமை என்பதை பதிவு செய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாக அமைகிறது

**ஆய்வு சுருக்கம்**

தமிழகக் கட்டடக்கலையில் மிக முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்த காலமாக கி.பி ஆறாம் நூற்றாண்டை சொல்லலாம் அந்த காலகட்டத்தில் பல்லவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முதிர்ந்த பாறைகளை குடைந்து கோவில்களை கட்டினர் முதலில் சமண சமயத்தில் இருந்து பின்பு சைவ சமயத்தை தழுவிய பல்லவ மன்னரான முதலாம் மகேந்திரவர்மன் குடைவரை கோயில் கலையின் முன்னோடி போற்றப்படுபவன் தமிழகத்தின் தென் பகுதியில் காணலாகும் பல்வேறு மலைபடுகைகளில் 200-300 ஆண்டுகளுக்கு முன்பு சமண துறவிகள் வாழ்ந்தமைக்கான அடையாளமாக கற் படுகைகளும் தமிழ் பிராமி கல்வெட்டுகளும் உள்ளன. இவை காலத்தால் அழியாது நிலைத்து நிற்க கூடியதாகவும் பண்டையகால புடைப்புச் சிற்ப கலைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது

**திறவுச் சொற்கள்**

சமர்ப்படுகைகள் - குடைவரை கோயில் - கல்வெட்டு செய்திகள் - புடைப்பு சிற்பங்கள் - சமணர் சமண தீர்த்தங்கரர் – பாறை - கழுகுமலை சமணர்மலை - யானைமலை

**முன்னுரை**

மலைகளைக் குடைந்த அமைக்கப்பட்ட கோவில்கள் குடைவரை கோவில்கள் என அழைக்கப்படுகின்றன. பண்டைய காலத்தில் கி.மு. 15 ஆம் நூற்றாண்டுக்கு பின் சுமார் 1000 ஆண்டுகள் வரை நீண்ட காலம் நிலைத்து நிற்காத மரம் மூங்கில் வைக்கோல் புல் போன்றவற்றை பயன்படுத்தியே கட்டிடங்களை அமைத்து வந்தார்கள் என கருதப்படுகிறது. கி.மு இரண்டு மூணு ஆம் நூற்றாண்டு முதல் பௌத்த மதம் தொடங்கிய காலத்தில் நிலத்தில் இருக்கக்கூடிய கட்டிடங்களை அமைப்பதற்கு உடைந்த கட்டிடங்களை அமைத்தனர்.

தமிழகத்தில் தெய்வ வழிபாட்டு முறை காலத்தின் கட்டாய தேவை ஆயிற்று .சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கட்டப்பட்ட சிறப்புமிக்க வீடுகளும் ஆலயங்களும் காலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் சிதைந்து போயின. எனவே வழிபாட்டிற்காக நிலையான கோயில்களை அமைப்பதற்கு சமணர்கள் பாறைகளை குடைந்து குடைவரை கோயில்களை உருவாக்கியுள்ளனர். அத்துடன் மலை படுகைகளிலேயே தங்கி வாழ்ந்துள்ளனர் .அந்த வகையில் தமிழகத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள சிறப்பு மிகுந்த புடைவரை கோயில்களில் அரிட்டாப்பட்டி, மாங்குளம், தென்பரங்குன்றம், கழுகுமலை, சமணர் மலை,கீழவளவு, பஞ்சபாண்டவர் மலை, யானைமலை ஆகியவை குறிப்பிடத்தக்கது .இவற்றில் காணக் கிடைக்கின்ற படைப்புச் சிற்பங்களும் கல்வெட்டு செய்திகளையும் இந்த கட்டுரையில் விரிவாக காண முற்படுவோம்

**அரிட்டாபட்டி மலை:**

மதுரைக்கு வடக்கு அமைந்துள்ள அரிட்டாபட்டி மலை சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் சமணதலமாக இருந்துள்ளது. இங்கு உள்ள சமண சிற்பத்தின் அடியில் காணப்படும் பத்தாம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு, பிறவியை கடக்க உதவும் புணையாக (தெப்பமாக) இம்மலை விளங்கியது என்பதை உணர்த்துகிறது. கல்வெட்டில் இது பிணையன் மலை என்று குறிப்பிடப்படுகிறது. புணையன் மலை என்பதே பிணையன் மலை என கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்நிலையில் பரங்குன்றம், சமணர்மலை(திருவுருவகம்), பள்ளி (குரண்டிமலை), யானைமலை, இருங்குன்றம் (அழகர்மலை) முதலிய ஐந்து மலைகளை எண்பெருங்குன்றங்களாக ஐயமின்றி கூறலாம். நாகமலை (கொங்கர்புளியங்குளம் குன்று), அரிட்டாபட்டிமலை (திருப்பிணையன் மலை), கீழவளவுக்குன்று முதலிய மூன்று மலைகளை எண்பெருங்குன்றங்களைச் சார்ந்தவையாக கருத வாய்ப்புள்ளது.

(வெ.வேதாச்சலம் ,எண்பெருங்குன்றம், ப-7)

ஆனைமலைக்கு வடக்கே திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள நரசிங்கம்பட்டிக்கு வடமேற்கே அரிட்டாபட்டிமலை உள்ளது. இது மதுரையில் இருந்து வடக்கே சுமார் பதினேழு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இதனை தற்போது கழிஞ்சமலை என்று அழைக்கின்றனர். இதன் பழம்பெயர் "திருப்பிணையன் மலை" ஆகும். இம்மலையின் கீழ்ப்புறமுள்ள இயற்கையான குகைத்தளத்தில் கி.மு முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் பிராமிக் கல்வெட்டு காணப்படுகிறது. நெல்வேலி சழிவன்

அதினன் வெளியன்” என்பவன் இப்பள்ளியை உருவாக்கியதாக கல்வெட்டு கூறுகிறது. இங்குள்ள கற்படுகைகள் தற்போது மண் முடிக்கிடக்கின்றன.

( Dundas, Paul (2003), The Jains Routledge. Pg. 125-126 )

கழுகுமலை சமர்படுகைகள் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் கழுகுமலை எனும் ஊரில் அமைந்துள்ளது. சமணர் படுகைகள் கோவில்பட்டியிலிருந்து 22 கிலோமீட்டர் தொலைவில் கழுகுமலை பேரூராட்சியில் உள்ளது. ”இச்சமணக் கல் படுக்கைகள் குடைவரை கட்டிட அமைப்பில், பாண்டிய மன்னன் பரந்தக நெடுஞ்சடையன் காலத்தில் (கிபி 768-800) அமைக்கப்பட்டதாக கருதப்படுகிறது” (இந்து சமய அறநிலைத்துறை, தமிழக அரசு வெளியீடு, 2015.)

இங்கு திகம்பர சமண துறவிகள் தங்கி, சமண சமயத்தை பரப்பினர். இச்சமணப் படுக்கைகளுக்கு அருகில் கிபி 8ம் நூற்றாண்டில் சிவன் கோவில், கழுகுமலை வெட்டுவான் கோயில் மற்றும் கழுகுமலை முருகன் கோயில் அமைந்துள்ளது.

இச்சமண படுக்கைகளில் மகாவீரர், பாகுபலி, பார்த்தீபநாதர் போன்ற 150 தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. கழுகுமலை சமணர் படுகைகள், தமிழக தொல்லியல் துறை பராமரிக்கிறது.

**ஏழடிப்பட்டம் சமணர் படுக்கைகள் மற்றும் கல்வெட்டுகள்**

புதுக்கோட்டையில் இருந்து விராலிமலைக்கு செல்லும் வழியில், 15மைல் கல் தொலைவில் சித்தன்னவாசல் குன்றில் இந்த சமனப்படுக்கைகளும் கல்வெட்டுகளும் அமைந்து உள்ளன.

இங்குள்ள படுக்கைகளில் பழமையானதும் மிகப்பெரியதுமான படுக்கைகளில், கல்வெட்டு ஒன்று தமிழ்பிராமி எழுத்துக்களால் உருவாக்கப் பெற்றுள்ளது. கிமு3-2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு ”யோமிநாட்டுக் குமட்டூர் பிறந்தான் காவுதியிதனுக்குச் சிந்துப் போச்சில் இளையார் செய்த அதிட்டானம்” என்று உரைக்கிறது. கி.பி 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க்கல்வெட்டு ஒன்றில் கடுந்தவம் புரிந்த சமணத்துறவிகளைப் பற்றி அறியலாம். (முனைவர் ஜெ. ராஜா முகமது, ”புதுக்கோட்டை மாவட்ட வரலாறு” அரசு அருங்காட்சியகம் வெளியீடு பக்-228-233)

**தென்பரங்குன்றம் மலை**

தென் தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் தென்பரங்குன்றம் மலையானது மதுரைக்கு தென்மேற்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருப்பரங்குன்றம் மலையில் உள்ள கோவில் முருகனின் அறுபடை வீடுகளில் முதன்மையானது ஆகும். இம்மலையின் கிரிவலம் வரும் வழியில் அதாவது மலையின் நேர் பின்பக்கத்தில் தென்பரங்குன்றம் அமைந்துள்ளது தென்பரங்குன்ற மலையில் சமணர் குடைவரை கோவில் உள்ளது. இம்மலை இந்திய தொல்லியல் ஆய்வகத்தின் கீழ் பராமரிக்கப்படுகிறது.

**அதன் வரலாறு**

2300 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மலையில் சமணத் துறவிகள் வாழ்ந்தமைக்கான அடையாளமாக கற்படுக்கைகளும், தமிழ் பிராமி கல்வெட்டுகளும் உள்ளன. தென்பரங்குன்றம் மலையில் கிபி ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த சமணர் தீர்த்தங்கரர் சிற்பங்களும்,

அர்த்தநாரீஸ்வரருடைய குடைவரை கோவிலும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய மெய்கீர்த்தி கல்வெட்டுகளும் காணப்படுகிறது.

இங்கு தியான நிலையில், அமர்ந்த கோலத்தில் சமண தீர்த்தங்கரர் சிற்பங்கள் காணப்படுகிறது. குடைவரைக் கோவிலின் வலப்பக்கம், நடராஜனும், சிவகாமியும் நடனம் ஆடியபடி சிற்பங்கள் காணப்படுகிறது இவ்விரண்டு சிற்பங்களும் சேதமடைந்துள்ளன.

இக்குடவரை கோவில் அமைந்த காலம் கி.பி முதல் நூற்றாண்டு ஆகும். இக்குடைவரை கோவிலில் மூன்று பெரிய தூண்கள் உள்ளன. கோவிலின் உள்ளே இடப்புறம் தனிச் சன்னதியில் அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் கிழக்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது. தெற்கு திசையை நோக்கியவாறு மூலவரான தில்லைக்குத்தனின் திருவுருவாச்சிலை பாதி சிதைந்த நிலையில் காணப்படுகிறது

**மாங்குளம் குடைவரை**

மாங்குளம் குடவரை என்பது மதுரையிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் உள்ள கரந்தைப்பட்டி என்னும் இடத்திலிருந்து செல்லும் கிளைச் சாலையில் எட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள மாங்குளம் என்னும் ஊரில் அமைந்துள்ள குடைவரை ஆகும். இப்பகுதியில் மக்களால் அம்மன்பட்டி மலை என்று அழைக்கப்படும் மலையிலேயே இக்குடைவரை உள்ளது இது ஒரு முற்றுப்பெறாத குடைவரை.

"நிலத்திலிருந்து ஐந்தரை மீட்டருக்கு மேல் உயரமான இடத்தில் இக்குடைவரை உள்ளது. இதன் முகப்பிற்கு முன் ஒடுக்கமான வெளியிடம் உள்ளது. தூண்கள் தெரியக்கூடிய அளவுக்கு குடைவு வேலைகள் இடம்பெற்றிருந்தாலும், பாறையில் இருந்து தூண்களைத் தனிமைப்படுத்தும் அளவுக்கு பாறை குறையப்படவில்லை. இதனால் எல்லா தூண்களுமே பாறையுடன் ஒட்டியபடியே காணப்படுகின்றன." (மு. நளினி ரா.கலைக்கோவன் தென் தமிழ்நாட்டு குடவரைகள் தொகுதி 1 2007 சேகர் பதிப்பகம் சென்னை பக்கம் -27)

இந்த மலைப்பகுதியில் சமர் வாழிடங்களும் அக்காலத்துக்குரிய கல்வெட்டுகளும் காணப்பட்டாலும் குடைவரை கோயில் பிற்பட்ட பாண்டியர் காலத்தைச் சேர்ந்தது.

**சமணர் மலை மதுரை**

மதுரை-தேனி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள நாகமலை புதுக்கோட்டைக்கு தெற்கே அமைந்துள்ள ஒரு குன்று சமணர் மலை ஆகும். இது கீழக்குயில்குடி ஊராட்சியில் உள்ள கிராமத்தில் அமைந்துள்ளது. இங்கு தமிழ்க் கல்வெட்டுகளும், சமண சிற்பங்களும் காணப்படுகின்றன.

சமணர் மலையின் தென்மேற்கு பகுதியில் சிற்பங்களுடன் கூடிய குகை ஒன்று காணப்படுகிறது. இந்த குகையின் இடதுபுற பாறை முகப்பில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ள அழகிய முக்குடை அண்ணலின் (மகாவீரர்) காது நீண்ட உருவம் ஒரு செட்டியாரைப் போல தோற்றமளிக்கிற காரணத்தால் செட்டிப்புடவு என அழைக்கப்படுகிறது. இச்சிற்பத்தில் மகாவீரர், இருபுறமும் சாமரம் வீசுபவர்கள் சூழ முக்குடைக்கு மேலே வானவர்கள் பறந்து வர அரச மரத்தின் கீழ் மூன்று சிம்மங்கள் தாங்கும் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அதன் கீழே இச்சிற்பத்தை செய்து கொடுத்தவரை பற்றிய வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படுகிறது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

”வெண்பு நாட்டு குரண்டி திருக்காட்டாம் பள்ளி
கனக நந்திப்பிடாரார் அபிநந்த படாரர்
அவர் மாணாக்கர் அறிமண்டல படாகர்
அபிநந்த படாகர் சேவித்த திருமேனி
(மதுரை வரலாறு 2013 பசுமை நடை மதுரை)

**தென் தமிழகப் பகுதியில் காணலாகும் சமணர் குடவரை கோவில்களும் கல்வெட்டு செய்திகளும்**

- சமணர் மலை மதுரை மாவட்டம் கீழக்குயில் குடி ஊராட்சியில் அமைந்துள்ளது
- இது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது இம்மலை மூன்று அடுக்குகள் கொண்டது
- சமணர் மலையில் சமண சிற்பங்களும் சமணப்படுகைகளும் காணப்படுகின்றன
- தமிழ்நாட்டில் பல சமண சிற்பங்களும் சமணப்படுதிகளும் காணப்பட்டாலும் சமணர் மலை என்ற பெயர் இம்மலையை மட்டுமே குறிக்கும்
- இம்மலை பேசிப்பள்ளம், மாதேவி பெரும்பள்ளி, செட்டிப்பொடவு என மூன்று சிறப்பு மிக்க வரலாற்று சின்னங்கள் உள்ளன

**சமணமலை சிறப்புகள்**

- 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமண சமயத்தின் பெருமையை விளக்கும் கல்வெட்டுகள்
- தமிழ்பிராமி கல்வெட்டு எழுத்துகள்
- கன்னட கல்வெட்டுகள்
- ஒன்பது சமண திருவருவங்கள் செதுக்கப்பட்ட சிற்பங்கள்
- ஐந்து சமணர்கல் திருமேனிகள்
- இயற்கையாகவே மலையில் அமைந்துள்ள சுணை

**அருகில் உள்ள இடங்கள்**

- யானைமலை
- கீழவளவு
- கழுகுமலை சமணர் படுகைகள்

கீழவளவு பஞ்சபாண்டவர் மலை மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கீழவளவு என்னும் கிராமம் மதுரையில் இருந்து 38 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இங்கு உள்ள பாறைக்கான பஞ்சபாண்டவர் மலை சமணர் படுகைகளுக்காகவும் சம சிற்பங்களுக்காகவும் இவ்வூர் அறியப்படுகிறது இந்த கல் படுக்கைகள் சிற்பங்கள் போன்றவை சமணத்துடன் தொடர்புடையவை பண்டைய தமிழகத்தில் சமண மதம் தலைதோங்கிய காலத்தில் பஞ்சபாண்டவர் மலையில் உள்ள குகைகளை சமணத்துறவியல் தங்கள் வாழ்க ஆற்றிக்கொண்டனர் இச்சவனப்படுகைகள் கிபி மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தது குகையில் சமண புடைப்பு சிற்பங்களாக பாகுபலி மற்றும் கடைசி தீர்த்தங்கரமான மகாவீரர் உள்ளிட்ட ஒன்பது தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு தமிழ் பிராமி மற்றும் வட்டெழுத்து கல்வெட்டுகளும் உள்ளன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

யானைமலை மதுரை மாவட்டம் கிழக்கு ஒன்றியத்தை சேர்ந்த ஒத்தக் கடை என்னும் ஊரில் அமைந்துள்ள ஒரு மலை ஆகும். தோன்றுவதால் யானை மலையை நரசிங்கமங்கலம் என்றும் அழைப்பர்.

**புடைப்பு சிற்பங்கள்**

கி.பி 9- 10 நூற்றாண்டுகளில் சமணத் துறவியான அச்சநந்தி என்பவரால் தீர்த்தங்கரர்களின் மகாவீரர் பார்சுவநாதர் மற்றும் பாகுபலி சிற்பங்கள் யானைமலையில் செதுக்கப்பட்டது இது தமிழ்நாடு அரசியல் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படுகிறது.

**முடிவுரை:**

அழியா கோயில்களை எழுப்பும் முயற்சியாக கி.பி ஏழாம் நூற்றாண்டில் புடவரை கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. அன்றைய காலம் தொட்டு இன்றைய வரையிலும் தமிழகத்தின் கோவில் கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலையின் வெளிநாட்டினர் வியந்து பாராட்டும் வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழக கோயில் கட்டிடம் மற்றும் சிற்ப கலைக்கு முன்னோடியாக விளங்குவது குடவரை கோயில்களே கட்டிட கட்டுமான கலை ஆனது அழகியல் கலையில் ஒரு வடிவம் மனிதர்கள் வசிப்பதற்காக கட்டப்படும் கட்டிடங்களில் இருந்து வழிபாட்டு மையங்கள் கட்டிட அமைப்புகள் மாறுபடும் ஒரு வழிபாட்டு மையம் அமைந்த இடத்தில் அதன் தொடக்க நிலையில் கட்டப்படும் கட்டுமானம் சிதிலமடைந்து போகும் போது அதனை சீரமைத்தல் என்பது இயல்பானது. ஆனால், கட்டிட கட்டுமான தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் அடிப்படையில் காலத்திற்கு காலம் கட்டமான அமைப்பில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கட்டுமான அமைப்பில் ஒரு புரட்சியாக நீண்ட காலம் சிதறாத வண்ணம் செதுக்கப்பட்ட ஆலயங்கள் குடைவரை கோயில்களாக திகழ்கின்றன. தமிழகத்தின் சிறப்பு வாய்ந்த இக்குடைவரை கோவில் அமைப்பினை முழுமையாக பட்டியலிட்டு அனைத்து குடைவரை கோவில்கள் சிற்பங்கள் சிற்பக்கலை நுணுக்கங்கள் ஆராய்ந்து தமிழர்களின் தொல்லியல் நுணுக்கங்களை கட்டிடக்கலை மற்றும் கட்டுமான கலை அறிந்து கொண்டு குடவரை கோவில் சிற்பங்கள் பற்றி ஆய்வை விரிவு படிக்க வேண்டியது தேவை அவசியமாகிறது.

**பார்வை நூல்கள்:**

1. தி. இராசமாணிக்கம், தென்குடவரை கோவில்கள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த முற்பதிப்பு கழகம், சென்னை 18. பதிப்பு ஆண்டு 1989.
2. வெ.வேதாச்சசலம்,எண்பெருங்குன்றம்.
3. மு.நளினி,ரா. கலைக்கோவன்,தென் தமிழ்நாட்டு குடைவரைக் கோவில், சேகர் பதிப்பகம்,சென்னை.2007.
4. மதுரை வரலாறு, பசுமைநடை பதிப்பகம், மதுரை. 2013.
5. ஜெ.ராஜா முகமது, புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, அரசு அருங்காட்சியகம் வெளியீடு,சென்னை.
6. Dundas, Paul, The Jain Routledge,2003.